**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 103 of 2014**

**Deposition of Witness P. W.6**

| | |
|---|---|
| **Name : முரளி** | **Father/Husband's Name: மாசிலாமணி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 03.10.2024**

**A1, A2, A4 to A7, A9 present. A3, A10 absent. 355 BNSS PFA. A8 died (C.A)**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் பழனி தேவஸ்தானத்தில் உடுமலை அரவிந்த் அசோசியேட் என்ற தனியார் செக்யூரிட்டி கம்பேனியில் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். சம்பவத்தின் போது எனது மேலதிகாரி சரவண பொய்கையில் என்னை செக்யூரிட்டியாக வேலை செய்ய சொன்னார்கள் நான் அங்கு சென்று எனது வேலையை தொடங்கினேன் அப்போது என்னுடன் முருகவேல் என்பவரும் செக்யூரிட்டியாக வேலை பார்த்து வந்தார். அப்போது நாங்கள் நடந்து சென்ற போது போலிசார் அடிவாரம் காவல் நிலையத்திற்கு சரவணை பொய்கையிலிருந்து எங்களை அழைத்து சென்றார் எனவும் என்னிடம் வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், முருகவேலும் கையொப்பம் இட்டோம் எனவும் மேற்படி மகேஷ் , ஆனந்த, லட்சுமணன் இவர்களுடன் தேவஸ்தான வண்டியில் செக்யூரிட்டியாக அவர்களுடன் போய் வருவீர்களா என்றால் நான் செல்லவில்லை. அப்போது அருள்குமார் , லட்சுமணன் , முருகேசன் ராஜேந்திரின் , கார்த்திக் , கண்ணன் ஆகிய 6 பேரும் முடி எடுக்க மாறி

மாறி வருவார்கள் என்றாலும் முடிகளை தகரப்பெட்டியில் வைத்து பூட்டி கிளர்க் செல்வராஜ் வைத்திருப்பார் என்றும் செல்வராஜும் டிரைவரும் இருவரும் சேர்ந்து தேவஸ்தானத்தில் கொண்டு செல்லும் போது பெண்கள் முடிகளை 5000 க்கும் 10000 க்கும் விற்கிறார்கள் என்றும் நான் அப்போது விஜயகுமார் , அருள்குமார் நாங்கள் எடுத்து தருகிறோம் என்றும், நாங்கள் சொல்கிற சங்கர் (எ) ராஜன் என்பவரிடம் கொடுத்தால் அதிக விலைக்கு வாங்கி கொண்டு பணம் கொடுப்பார் என சொன்னதாகவும் வாங்கிய பணத்தில் மேற்படி செக்யூரிட்டியான 7 பேருக்கும் பணம் கொடுத்ததை ஒப்புக் கொண்டதாகவும் பணம் கொடுப்பதாக சொன்னதை நம்பி பேராசை பட்டு ஒத்துக்கொண்டார்கள் எனவும் மேலும் 6-7 மாதமாக தொடர்ந்து மாலை நேரத்தில் 8 இடங்களில் எடுத்து வந்த முடிகளை இடும்பன் சிறுகுடியில் வைப்பதற்கு முன்பாகவே 5-10 முடிகளை செல்வராஜ் எடுத்துகொடுப்பார் எனவும் அதை தானும், அருள் குமார் சேர்ந்து பழனி அடிவாரம் சங்கர் (எ) ராஜனிடம் கொடுத்து பெருமாள் என்பவரிடம் கொடுத்தும் கொடுக்கின்ற முடிகளுக்கு 10000, 20000 கொடுப்பார்கள் எனவும் அந்த பணத்தை செல்வராஜிடம் கொடுப்பார்கள் எனவும் செக்யூரிட்டியான தங்களுக்கு 1000,500 கொடுப்பார்கள் எனவும் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி வாக்குமூலத்தின் படி எதிரிகள் லட்சுமணன் முருகேசன் அவர்களை அடையாளம் காட்ட 4.45 மணிக்கு கைது செய்தார் எனவும் அதன் பிறகு எதிரிகளுடன் புறப்பட்டு ராமநாத நகர் வந்து கூட்டாளிகளான கார்த்திக் ராஜேந்திரன் அவர்களை அடையாளம் காட்ட 5.20 மணிக்கு அவர்களை கைது செய்தார் எனவும் கைது செய்யப்பட்ட விஜயகுமார் வாக்குமூலப்படி சங்கர் (எ) ராஜாவை அடையாளம் காட்ட 6.00 மணிக்கு கைது செய்தார் எனவும் பின்னர் அவர் வீட்டிலிருந்து 703 தலை முடிச்சுகளை எடுத்து கொடுத்தார் எனவும் சொன்னால் சரியல்ல. அதே இடத்தில் வைத்து இன்ஸ்பெக்டர் அத்தாட்சியில் கையெழுத்து பெற்றார் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. நான் கையொப்பம் போட்ட தாளில் ஆய்வாளர் அன்றே கிழித்துவிட்டார் என்னுடைய கையொப்பம் போலவே கையொப்பமிட்டுள்ளார்கள். பின்னர் பெருமாள் என்பவர் வீட்டிலிருந்து 550 தலைமுடி முடிச்சுகளை எடுத்து கொடுக்க அதையும் காவல் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார் எனவும் அதில் நானும், முருகவேலும் சாட்சி

கையொப்பம் இட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. பின்னர் எதிரிகள் 6 பேர் மற்றும் கைப்பற்றிய முடியுடன் காவல் நிலையம் அழைத்து சென்றார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவங்களை போலிஸ் விசாரணையின் போது சொல்லிவிட்டும் அத்தாட்சியில் கைப்பற்றும் போது உடனிருந்து விட்டும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் இட்டு விட்டும் தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. இல்லை

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.10.03 16:26:32 +0530

நீதித்துறை நடுவர்
பழனி